இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 313 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 08 – வெள்ளிக்கிழமை 23 ஜூன் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 313 : Thiruvalluvar Year - 2054 - Aani 08 - Firday 23 June 2023 - Chennai 12 Pages ₹ 5.00



பீகார் மாநிலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.6.2023) அரசு விருந்தினர் மாளிகையில் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள் சால்வை அணிவித்து வரவேற்றபோது முதலமைச்சர் அவர்கள் KARUNANIDHI A LIFE என்ற புத்தகத்தை வழங்கினார். உடன் பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.6.2023) பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, உடல்நலம் குறித்து விசாரித்தறிந்து சால்வை அணிவித்து, KARUNANIDHI A LIFE என்ற புத்தகத்தை வழங்கினார். உடன் பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள் உள்ளார்.

## இன்று பாட்னாவில் மதச்சார்பற்ற அணிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம்!

# பீகாரில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்!

**பாட்னா, ஜீன் 23-**

**பாட்னாவில் மதச்சார்பற்ற அணிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. அனைத்து எதிர்க்கட்சி தலைவர்கள் பங்கேற்கும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் பீகார் தலைநகர் பாட்னா வருகை தந்தார்.**

நாடாளுமன்றத் தேர்தல் வருகிற 2024ஆம் ஆண்டு நடப்பதையொட்டி எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சியில், பீகார் முதல்வர் நிதிஷ்குமார் ஈடுபட்டுவருகிறார். இதற்காக பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை கடந்த 12ஆம் தேதி நிதிஷ்குமார் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், அன்றைய தினத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அமெரிக்காவில் இருந்ததால் வர முடியவில்லை என்று கூறப்பட்டது. இதே போல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மேட்டூர் அணையைத் திறக்க இருந்ததால் அவராலும் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

**பீகார் முதல்வர் நிதிஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெறும் கூட்டம்!**

இதனால் எதிர்க்கட்சிகள் கூட்டத்தை 23ஆம் தேதிக்கு (இன்று) தள்ளி வைத்தார்.

இன்று (23ம்தேதி) பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

“இந்தக் கூட்டத்தில், நான் பங்கேற்பேன்!” என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருக்கிறார். திருவாரூரில் கடந்த 20ஆம் தேதி நடைபெற்ற ‘கலைஞர் கோட்டம்’ திறப்பு விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

“இந்தியாவில் ஜனநாயகத்தை காக்கக்கூடிய பொறுப்பை ஏற்று அதற்கு அடித்தளம் அமைக்கும் பணியை பீகார் தொடங்கியிருக்கிறது.

**பா.ஜ.க.வின் சர்வாதிகாரத்திற்கு முடிவுகட்ட நடைபெறும் கூட்டம்!**

வருகிற 23ஆம் தேதியன்று பீகார் மாநிலம் பாட்னாவில் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடக்க இருக்கிறது. பாட்னா என்பது இந்தியாவின் தொன்மையான நகரங்களில் ஒன்றாகும். பாடலிபுத்திரம் என்று வரலாற்றில் அழைக்கப்படக்கூடிய நகரம்தான் இன்றைய பாட்னா. அறிவு மற்றும் ஞானத்தின் அடையாளமாகச் சொல்லப்பட்ட நகரம் அது.

‘ஜனநாயகம் என்பது வீட்டுக்கு விளக்கு. சர்வாதிகாரம் என்பது காட்டுத் தீ’ என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள்.

பா.ஜ.க. கடந்த பத்தாண்டு காலமாகப் பரப்பி வரும் சர்வாதிகார காட்டுத் தீயை அணைக்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கிறது. அதற்கான முதல் ஜனநாயக விளக்கை பாட்னாவில் ஏற்றுவதற்கான ஏற்பாட்டை நிதிஷ் குமார் அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். நானும் பாட்னா செல்கிறேன். உங்களுடைய அன்போடு செல்கிறேன். உங்களுடைய நம்பிக்கையோடு செல்கிறேன். ஜனநாயகப் போர்க்களத்தில் கலைஞரின் தளபதியாக நானும் பங்கெடுக்க இருக்கிறேன்” என்று பேசினார்.

**மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்!**

நேற்று (22ம் தேதி) மாலை .5.30 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாட்னா புறப்பட்டுச் சென்றார்.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, தனது கருத்துக்களைப் பதிவு செய்வதுடன் அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார்.

இன்று பீகாரில் நடைபெறும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்துள்ளதாகக் கருதப்படுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கூட்டம் முடிந்ததும் இன்று இரவு 8 மணிக்கு பீகாரில் இருந்து விமானத்தில் புறப்பட்டு சென்னைக்குத் திரும்பத் திட்டமிட்டுள்ளார்.

---

### பாசிச ஒன்றிய அரசை முடிவிற்குக் கொண்டு வர - சமூக நீதி மண்ணில்

## ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகள் போர் முழக்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

பாட்னா, ஜூன்.23–

பாசிச ஒன்றிய அரசை முடிவுக்கு கொண்டு வர ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகளின் போர் முழக்கம்,, இத்தகைய சமூக நீதி மண்ணில் எழத் தொடங்குவதில் எந்த வியப்பும் இல்லை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

பாட்னா வந்தடைந்தேன். பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள், பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி மற்றும் பீகார் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளின் இதமான வரவேற்பைப் பெறறேன்.

ஆசிய சோதி புத்தர், மக்கள் நாயகர் கர்ப்பூரி தாக்கூர், பி.பி. மண்டல் ஆகியோரை நமக்களித்த மண்ணில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த பாசிச எதேச்சாதிகார ஒன்றிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்து, மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியா மீண்டும் மலர, ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகளின் போர் முழக்கம் இத்தகைய சமூகநீதி மண்ணில் இருந்து எழத் தொடங்குவதில் எந்த வியப்பும் இல்லை.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### பீகார் மாநிலம் பாட்னாவிற்கு வருகை தந்த

## முதல்வர் மு.க.ஸ்டாலினை பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வரவேற்றார்!

### முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து நலம் விசாரித்தார்!

பாட்னா, ஜூன் 23-

பீகார் மாநிலம் பாட்னாவில் மதச்சார்பற்ற அணிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்கேற்க நேற்று பாட்னா வருகை தந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை பீகார் முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் வரவேற்றனர். மேலும் பல்வேறு தமிழ் அமைப்பினர்கள் முதல்வர் அவர்களை உற்சாகமாக வரவேற்றனர்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் அவர்களை அவரது இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய ஜனதா தளத் தலைவரும், பீகார் மாநில முதலமைச்சருமான நிதிஷ்குமார் மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக பாட்னாவில் மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று (23.6.2023) நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து விமானம் மூலம் பாட்னா வருகை தந்தார்.

அவருக்கு பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார், துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.